நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மன்னார்குடி

முன்னிலை: திரு.ஜெ. தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,மன்னார்குடி
2026 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

<u>சுருக்கு விசாரணை வழக்கு எண்.2011/2021</u>

TNTV07-002463-2021

CASE SUMMARY

Sl. No.	Description	Remarks
1	The period of remand of the accused	Remanded on : -- Released on : 21.10.2021(88 CrPc. Bond)
2	The date of filing of complaint/final report in the Court	27.09.2021
3	The date of committal of the case to the Court of Sessions	Not Applicable
4	The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be	16.11.2021
5	Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code .	Nil
6	Date of examination in Chief and Cross examination of a witness	Chief Cross – PW1– 05.04.2022 11.01.2024 PW1 - 25.06.2025 05.05.2025 DW1- 04.02.2026 04.02.2026
7	Date of examination of the accused under section 351(1)(BNSS) of the Court	26.08.2025
8	Details of Abscondence of an	Not Applicable

 JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:46:29 +0530

	accused and his appearance /production, as the case may be	
9	Grant of stay by superior Courts and the results thereof	Not Applicable

ஜெயராஜ் ,வயது 48/2021, த/பெ.சிங்கராஜ், 21, உப்புக்காரத்தெரு, மன்னார்குடி – 614 001, திருவாரூர் மாவட்டம். ச/பி. 138 மாற்றுமுறை ஆவணச்சட்டம்,		.............குற்ற முறையீட்டாளர்
	/எதிர்/	
R.V. கண்ணன்,வயது 65/2021, த/பெ.ரெத்தினவாண்டையார், 150. பாரதிதாசன் நகர், ஒலிம்பிக் வீதி, அசேசம் –அஞ்சல், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.		................எதிரி

இவ்வழக்கானது புகார்தாரரால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1861 பிரிவு 142 ன் கீழ் எதிரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கு.வி.மு.ச. பிரிவு 200 ன் கீழ் தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டு, அதனை இந்நீதிமன்றம் கடந்த 30.09.2021 ஆம் தேதி அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையிலிருந்து வந்து, என் முன்பாக இறுதி விசாரணைக்கு வரப்பெற்று புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கோ.பஞ்சமூர்த்தி, B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.S.நடேஷ்,B.A.,L.L.B.,அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (26.05.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

//தீர்ப்புரை//

1. புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்றமுறையீட்டின் சுருக்கம்

புகார்தாரரும், எதிரியும் நன்கு அறிமுகமாகி பழக்கப்பட்ட நபர்கள் என்றும் அந்த வகையில் எதிரி அவரது தொழில் அபிவிருத்திக்காக வேண்டி திரும்ப தருவதாக உறுதியளித்து பெற்றிருந்த கைமாற்றுக்கடன் தொகை ரூ.20,00,000/– (ரூபாய்

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:46:40 +0530

இருபது லட்சம்) த்தை திரும்ப கேட்டபோது எதிரி அவரது நிறுவனமான பகவதி ஏஜென்சீஸ் மன்னார்குடி, நிறுவனத்தின் வங்கி கணக்குள்ள மன்னார்குடி லெட்சுமி விலாஸ் வங்கிக்கிளையில் மாற்றத்தகுந்த காசோலை ஒன்றை புகார்தாரர் பெயருக்கு ரூ.20,00,000/− (ரூபாய் இருபது லட்சம்) தொகை குறிப்பிட்டு கடந்த 11.01.2021 ஆம் தேதியிட்டு காசோலை வழங்கியதை, புகார்தாரர் அவரது வங்கிக்கணக்குள்ள மன்னார்குடி சிட்டி யூனியன் வங்கிகிளையில் கடந்த 21.01.2021 அன்று வசூலுக்கு தாக்கல் செய்ய மேற்படி எதிரி வழங்கிய காசோலையான அவரது நிறுவன வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்று காரணம் காட்டப்பட்டு கடந்த 22.01.2021 அன்று திருப்பப்பட்டுள்ளது என்றும், புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் காசோலை திருப்பப்பட்ட விவரத்தை தெரிவித்தும், தொகையை திரும்ப கேட்டும் கடந்த 23.01.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை எதிரி கடந்த 25.01.2021 அன்று பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், அதன்பிறகு எதிரியானவர் புகார்தாரரை அணுகி மேற்படி கடன் தொகையை 3 மாதங்களில் திருப்பிக் கொடுத்துவிடுவதாகவும், சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் வேண்டி கேட்டுக்கொண்டதன் பேரில் கடந்த 01.03.2021 அன்று புகார்தாரரும் எதிரியும் சாட்சிகள் முன்னிலையில் ஒரு உறுதிமொழி ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு கடன் தொகை ரூ.20,00,000/− (ரூபாய் இருபது லட்சம்) த்துடன் செலவு தொகை மற்றும் கால அவகாசத்திற்கு ரூ.1,00,000/− (ரூபாய் ஒரு லட்சம்) சேர்த்துக்கொடுப்பதாக எதிரியே முன் வந்து ஒப்புக்கொண்டு அன்றைய தினமே ரூ.1,00,000/− (ரூபாய் ஒரு லட்சம்) த்தை ரொக்கமாக எதிரி புகார்தாரரிடம் கொடுத்துவிட்டு , எதிரி கடன் தொகை ரூ.20,00,000/−(ரூபாய் இருபது லட்சம்) த்தை 3 மாதகாலக்கெடுவிற்குள் புகார்தாரர் வசம் திரும்ப கொடுத்து விடுவதாகவும் உறுதியளித்து, ஒரு உறுதிமொழி ஆவணம் ஏற்படுத்தி கொள்ளப்பட்டுள்ளது என்றும்,

அதன்படி புகார்தாரர் எதிரி ஒப்புக்கொண்ட காலக்கெடு முடிவடைந்த உடன் கடன் தொகையை எதிரியிடம் திரும்ப கேட்டு வந்த நிலையில் எதிரி அவரது வங்கிக்கணக்குள்ள மன்னார்குடி, லெட்சுமி விலாஸ் வங்கிக்கிளையில் மாற்றத்தகுந்த காசோலை ஒன்றை புகார்தாரர் பெயருக்கு ரூ.20,00,000/− (ரூபாய் இருபது லட்சம்) தொகை குறிப்பிட்டு கடந்த 28.08.2021 ஆம் தேதியிட்டு வழங்கியுள்ளார் என்றும், (காசோலை எண்.000119)

புகார்தாரர் எதிரி வழங்கிய காசோலையை பணமாக்கும் பொருட்டு தனது வங்கிக்கணக்குள்ள மன்னார்குடி, சிட்டி யூனியன் வங்கிக்கிளையில் கடந்த 01.09.2021 அன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி காசோலையானது எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) எனக்காரணம் காட்டப்பட்டு கடந்த 02.09.2021 அன்று திருப்பப்பட்டுள்ளது என்றும்.

புகார்தாரர், எதிரி வழங்கிய காசோலை பணமாகாமல் திருப்பப்பட்டது குறித்து விவரம் தெரிவித்தும், அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்குள் காசோலைக்குரிய

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:46:48 +0530

தொகையை திரும்ப வழங்கக்கோரியும் , தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு கடந்த 03.09.2021 அன்று பதிவஞ்சலில் அறிவிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார் என்றும் மேற்படி அறிவிப்பை எதிரியானவர் கடந்த 04.09.2021 அன்று பெற்றுக் கொண்டுள்ளார் என்றும், எதிரி இது நாள் வரை காசோலைக்குரிய தொகையை புகார்தாரருக்கு கொடுக்காது இருந்து வருகிறார் என்றும், எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டே வேண்டுமென்றே என்னிடம் காசோலை கொடுத்து நம்பவைத்து,ஏமாற்றி மோசடி செய்துள்ளார் என்றும், மேற்படி எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் படி குற்றமாகிறது என்றும், எனவே எதிரியை வரவழைத்து விசாரித்து எதிரியை தண்டிக்கும் போது கு.வி.மு.ச.357 வது பிரிவின் கீழ் புகார்தாரருக்கு எதிரியிடமிருந்து வரவேண்டிய காசோலைக்குரிய தொகையை நிறையீடாக புகார்தாரருக்கு தர வேண்டி உத்தரவிட பணிவுடன் வேண்டப்படுகிறது.

2.புகாரைப்பெற்றுக் கொண்ட பிறகு புகார்தாரரை விசாரித்து நிரூபண வாக்குமூலம் பெற்று முதல்நோக்கு வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதியதால் எதிரியை விசாரணைக்கு முன்னிலையாக வேண்டி அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன்கீழ் புகார் மனுவின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு போதுமான கால அவகாசம் வழங்கியும், எதிரி மீதான குற்றச்சாட்டின் சாராம்சத்தை கு.வி.மு.ச. பிரிவு 251 ன் கீழ் படித்து காண்பித்தபோது எதிரி குற்றத்தை மறுத்தார். எதிரி மீது பிரிவு 138 ன் கீழ் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. எதிரி குற்றத்தை மறுத்ததால் புகார்தாரர் தரப்பில் ம.சா. 1 ஜெயராஜ் சாட்சியாக விசாரிக்கப்பட்டும், புகார்தாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 8 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பு சாட்சியின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு எதிராக தோன்றியவற்றை பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் விளக்கிக் கூறி வினவியபோது எதிரி " பொய்சாட்சி" என்றும், " பொய்வழக்கு" என்றும் கூறி வழக்கை மறுத்து தனது தரப்பில் விசாரிக்க சாட்சி " உண்டு" என்றதன் பேரில் எதிரி தரப்பில் South Indian Bank, Mannargudi வங்கியின் மேலாளர் என்பவர் நிதின்நாராயணன்–எ.ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டும், எ.ம.சா.ஆ. 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

<u>5. எதிரி தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

எதிரி ஒருபோதும் புகார்தாரரிடம் ரூபாய் 20,00,000 கடன் பெறவில்லை என்றும்,எதிரி புகார்தாரரிடம் ரூபாய் 9,00,000 லட்சம் கடனான பெற்றதாகவும் அதற்கு பிணையமாகவும் மன்னார்குடி சௌத்து இந்தியன் வங்கி கிளையின் ஏழு

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.26 16:46:57 +0530

காசோலைகள் தேதி மற்றும் தொகை குறிப்பிடாமலும் கையொப்பம் செய்த காசோலையை கொடுத்துள்ளார் என்றும், மேலும் லட்சுமிவிலாஸ் வங்கியின் ஆறு காசோலைகள் மற்றும் கையொப்பம் செய்து பூர்த்தி செய்யப்படாத பத்திரங்கள் நான்கு பிணையமாக கொடுத்துள்ளதாகவும் எதிரி வாங்கிய ரூபாய் 9,00,000 லட்சம் கடனுக்கு புகார்தாரர் வட்டிக்கு மேல் வட்டி போட்டு கந்து வட்டி கணக்கு செய்யப்பட்டு எதிரியிடம் ரூபாய் இருபது லட்சத்தை புகார்தாரரால் நிர்பந்தம் செய்யப்பட்டது என்பது தான் உண்மை என்றும், எதிரி மேற்படி இருபது லட்சத்தை புகார்தாரரிடம் கொடுத்துவிடுகிறேன் என்று ஒப்புக்கொண்டதன் பெயரில் புகார்தாரரால் எதிரியின் சௌவுத் இந்தியன் வங்கியின் ஏழு காசோலையும், பல்வேறு தேதிகளில் ரூபாய் பதினேழு இலட்சத்தையும் நேரடியாக வங்கியில் புகார்தாரர் பெற்று கொண்டார் என்றும்,எதிரி மீதமுள்ள மூன்று லட்சம் தர வேண்டிய நிலை இருக்கும் பொழுது புகார்தாரர் சில நபரின் துர்போதனை ஆலோசனையின் பெயரில் எதிரி பிணையமாக அளித்த லட்சுமி விலாஸ் வங்கி காசோலையில் ரூபாய் இருபது இலட்சத்தையும் பூர்த்தி செய்யப்பட்ட காசோலை வங்கியால் சொல்லப்பட்டு திருப்பப்பட்டன என்றும், புகார்தாரர் எதிரியிடம் 24.02.2026 ம் தேதி நிரப்பபடாத இரண்டு பத்திரம் மற்றும் நான்கு பேப்பர்களில் கையெழுத்து பெற்றுக் கொண்டு ரூபாய் ஒரு இலட்சம் ரொக்கத்தை பெற்றுக்கொண்டு மீதமுள்ள இரண்டு இலட்சத்தை இரண்டு மாத அவகாசத்தில் கொடுத்து விட வேண்டும் என்றும்,மேற்படி பணத்தை கொடுத்து விட்டு பிணையமாக அளித்து காசோலைகள் மற்றும் ஆவணத்தை பெற்று கொள்ளலாம் என்று கூறினார் என்றும், அந்த நம்பிக்கை அடிப்படையில் எதிரி மீதமுள்ள ரூபாய் இரண்டு இலட்சத்தை புகார்தாரரிடம் கொடுத்துவிட்டார் என்றும், புகார்தாரர் மீதமுள்ள காசோலை மற்றும் ஆவணங்களை எதிரி வசம் தராமல் வீண் சால்சால்புகள் சொல்லி காலம் தாழ்த்தி வந்தார் என்றும், பின்னர் தமிழ்நாடு முழுவதும் கோரோனா ஊரடங்கு காலம் ஏற்பட்டதால் புகார்தாரர் பின்னர் சால்சால்பு சொல்லி ஆவணங்களை தராமல் இழுத்து அடித்து விட்டார் என்றும், நலிவடைந்த கடனுக்கு மீண்டும் புகார்தாரர் இருபது லட்சம் தர வேண்டும் என்றும், புகார்தாரர் தவறான சங்கதிகள் உடன் இந்த வழக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும், தொகை மற்றும் தேதி பூர்த்தி செய்யாமல் பிணையமாக எதிரியால் வழங்கப்பட்ட காசோலை எண்000119 புகார்தாரர் குறுக்கு வழியில் இந்த ஆதாய தொகையால் இந்த வழக்கு காசோலை தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த ரூ.17,00,000/- + ரூ.1,00,000/-ஆக மொத்தம் ரூ.18,00,000/- காசோலைக்குரிய தொகை ரூ.20,00,000/-த்தில் கழிக்கப்படவில்லை என்பதால் ரூ.20,00,000/- சட்டப்படியான வசூலிக்கக்கூடிய கடன் தொகை இல்லை என்பதால் புகார் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று வாதிடப்பட்டது.

6. புகார்தாரர் தனது முதல் நிலை மெய்ப்பிக்கும் சுமையை நிறைவு செய்து எதிரி மீது மாற்று முறையாவன சட்டம் பிரிவு 138 இன் படியான குற்றத்தை தகுதிநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் மெய்ப்பித்துள்ளாரா ? இல்லையா?

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:47:07 +0530

7. எதிரி வழக்கில் ஓர் நிகழ்தற்குரிய எதிர்வாததிற்கான சாத்திய கூறுகளின் மேம்பட்ட தன்மையை முன்னிறுத்தி உள்ளாரா? எதிரி எடுத்துள்ள எதிர்வாதத்தை மெய்ப்பித்துள்ளாரா ? என்பதாகும்.

8. தீர்வு :

இவ்வழக்கின் எதிரி மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் விசாரிக்கத்தக்க வகையில் குற்றம் புரிந்துள்ளரா? என்பதை புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை ஆராய்கின்றபோது, எதிரியால் புகார்தாருக்கு, 28.08.2021 ஆம் தேதியிட்ட மன்னார்குடி லெட்சுமி விலாஸ் வங்கிக்காசோலை அசல்–**ம.சா.ஆ.1,** 02.09.2021 அன்று மன்னார்குடி சிட்டி யூனியன் வங்கிக்காசோலை திருப்பப்பட்டதற்கான காரணம் காட்டும் நமூனா **ம.சா.ஆ.2,** 03.09.2021 ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.3,** அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **ம.சா.ஆ.4**, புகார்தாரரும் எதிரியும் கடந்த 01.03.2021–ல் ஏற்படுத்திக்கொண்ட உறுதிமொழி ஆவணம் (2 பக்கங்கள்) அசல் **ம.சா.ஆ.5,** 04.10.2021 ஆம் தேதியிட்ட எதிரி வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு **ம.சா.ஆ.6,** எதிரி கொடுத்த காசோலை திருப்பப்பட்டதற்காக புகார்தாரர் வழக்கறிஞர் மூலம் 23.01.2021 ஆம் தேதியன்று அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.7,** 21.01.2021 ஆம் தேதியிட்ட புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பை எதிரி தரப்பில் பெற்றதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் **ம.சா.ஆ.8** மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மூலம் முதல்நோக்கு வழக்கிற்கு தேவையான சங்கதிகள் இருப்பதாகவும் அறியமுடிகிறது.

9. இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 118 (அ) ஆகியவற்றின் மீதான சட்ட அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக உள்ளது. பிரிவு 118(அ)ன் படி மறுத்துக்கூறும் சங்கதிகளை நிரூபித்தாலன்றி(Until the contrary is proved) கொடுக்கப்பட்ட ஆவணம் மறுபயனிற்காக வழங்கப்பட்டதாகவே கருதவேண்டும் என்று விளம்புகிறது. பிரிவு 139 மாற்றுமுறை ஆவணத்தை வைத்திருப்பவரிடம் அதை கொடுத்தவர் கடனுக்காக கொடுத்ததாகவே அனுமானிக்க வேண்டும் என்று கூறுகிறது. எனவே பிரிவு 118(அ) மற்றும் 139 ஆகியவற்றில் கூறியுள்ளவாறு எதிரி தனது தரப்பிலான வாதத்தை நிரூபிக்காத வரை காசோலை கடனுக்காகத்தான் வழங்கியதாக அனுமானிக்க வேண்டும் என்று பிரிவு 138 ல் கூறப்பட்டுள்ளது.

பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தை பரிசீலனை செய்த வகையில்,

Dishonour of cheque for insufficiency, etc., of funds in the account.–

Where any cheque drawn by a person on an account maintained by him with a banker for payment of any amount of money to another person from out of that account for the discharge, in whole or in part, of any debt or other liability, is returned by the bank unpaid, either because of the amount of money standing to the credit of that account

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:47:15 +0530

is insufficient to honour the cheque or that it exceeds the amount arranged to be paid from that account by an agreement made with that bank, such person shall be deemed to have committed an offence and shall, without prejudice to any other provisions of this Act, be punished with imprisonment for a term which may be extended to two years, or with fine which may extend to twice the amount of the cheque, or with both:Provided that nothing contained in this section shall apply unless

(a)the cheque has been presented to the bank within a period of six months from the date on which it is drawn or within the period of its validity, whichever is earlier

*(b)**the payee or the holder in due course of the cheque, as the case may be, makes a demand for the payment of the said amount of money by giving a notice in writing, to the drawer of the cheque, [within thirty days of the receipt of information by him from the bank regarding the return of the cheque as unpaid;***

(c)the drawer of such cheque fails to make the payment of the said amount of money to the payee or, as the case may be, to the holder in due course of the cheque, within fifteen days of the receipt of the said notice.Explanation.—For the purposes of this section, "debt or other liability" means a legally enforceable debt or other liability.

என்பதும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று புகார்தாரர் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

10.புகார்தாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் புகார்தாரரும், எதிரியும் நன்கு அறிமுகமாகி பழக்கப்பட்ட நபர்கள் என்றும் அந்த வகையில் எதிரி அவரது தொழில் அபிவிருத்திக்காக வேண்டி திரும்ப தருவதாக உறுதியளித்து பெற்றிருந்த கைமாற்றுக்கடன் தொகை ரூ.20,00,000/- (ரூபாய் இருபது லட்சம்) த்தை திரும்ப கேட்டபோது எதிரி அவரது நிறுவனமான பகவதி ஏஜென்சீஸ் மன்னார்குடி, நிறுவனத்தின் வங்கி கணக்குள்ள மன்னார்குடி லெட்சுமி விலாஸ் வங்கிக்கிளையில் மாற்றத்தகுந்த காசோலை ஒன்றை புகார்தாரர் பெயருக்கு ரூ.20,00,000/- (ரூபாய் இருபது லட்சம்) தொகை குறிப்பிட்டு கடந்த 11.01.2021 ஆம் தேதியிட்டு காசோலை வழங்கியதை, புகார்தாரர் அவரது வங்கிக்கணக்குள்ள மன்னார்குடி சிட்டி யூனியன் வங்கிகிளையில் கடந்த 21.01.2021 அன்று வசூலுக்கு தாக்கல் செய்ய மேற்படி எதிரி வழங்கிய காசோலையான அவரது நிறுவன வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்று காரணம் காட்டப்பட்டு கடந்த 22.01.2021 அன்று திருப்பப்பட்டுள்ளது என்றும், புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் காசோலை திருப்பப்பட்ட விவரத்தை தெரிவித்தும், தொகையை திரும்ப கேட்டும் கடந்த

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.26 16:47:24 +0530

23.01.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை எதிரி கடந்த 25.01.2021 அன்று பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், அதன்பிறகு எதிரியானவர் புகார்தாரரை அணுகி மேற்படி கடன் தொகையை 3 மாதங்களில் திருப்பிக் கொடுத்து விடுவதாகவும், சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதன் பேரில் கடந்த 01.03.2021 அன்று புகார்தாரரும் எதிரியும் சாட்சிகள் முன்னிலையில் ஒரு உறுதிமொழி ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டு கடன் தொகை ரூ.20,00,000/− (ரூபாய் இருபது லட்சம்) த்துடன் செலவு தொகை மற்றும் கால அவகாசத்திற்கு ரூ.1,00,000/− (ரூபாய் ஒரு லட்சம்) சேர்த்துக்கொடுப்பதாக எதிரியே முன் வந்து ஒப்புக்கொண்டு அன்றைய தினமே ரூ.1,00,000/− (ரூபாய் ஒரு லட்சம்) த்தை ரொக்கமாக எதிரி புகார்தாரரிடம் கொடுத்துவிட்டு, எதிரி கடன் தொகை ரூ.20,00,000/−(ரூபாய் இருபது லட்சம்) த்தை 3 மாதகாலக்கெடுவிற்குள் புகார்தாரர் வசம் திரும்ப கொடுத்து விடுவதாகவும் உறுதியளித்து, ஒரு உறுதிமொழி ஆவணம் ஏற்படுத்தி கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேலும்,

அதன்படி புகார்தாரர் எதிரி ஒப்புக்கொண்ட காலக்கெடு முடிவடைந்த உடன் கடன் தொகையை எதிரியிடம் திரும்ப கேட்டு வந்த நிலையில் எதிரி அவரது வங்கிக்கணக்குள்ள மன்னார்குடி, லெட்சுமி விலாஸ் வங்கிக்கிளையில் மாற்றத்தகுந்த காசோலை ஒன்றை புகார்தாரர் பெயருக்கு ரூ.20,00,000/− (ரூபாய் இருபது லட்சம்) தொகை குறிப்பிட்டு கடந்த 28.08.2021 ஆம் தேதியிட்டு வழங்கியுள்ளார் என்றும், (காசோலை எண். 000119)

புகார்தாரர் எதிரி வழங்கிய காசோலையை பணமாக்கும் பொருட்டு தனது வங்கிக்கணக்குள்ள மன்னார்குடி, சிட்டி யூனியன் வங்கிக்கிளையில் கடந்த 01.09.2021 அன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி காசோலையானது எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) எனக்காரணம் காட்டப்பட்டு கடந்த 02.09.2021 அன்று திருப்பப்பட்டுள்ளது என்றும், மேலும்,

புகார்தாரர், எதிரி வழங்கிய காசோலை பணமாகாமல் திருப்பப்பட்டது குறித்து விவரம் தெரிவித்தும் , அறிவிப்பு கிடைத்த 15 தினங்களுக்குள் காசோலைக்குரிய தொகையை திரும்ப வழங்கக்கோரியும் , தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு கடந்த 03.09.2021 அன்று பதிவஞ்சலில் அறிவிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார் என்றும், மேற்படி அறிவிப்பை எதிரியானவர் கடந்த 04.09.2021 அன்று பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் எதிரி இது நாள் வரை காசோலைக்குரிய தொகையை புகார்தாரருக்கு கொடுக்காது இருந்து வருகிறார் என்றும், எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை நன்கு தெரிந்து கொண்டே வேண்டுமென்றே என்னிடம் காசோலை கொடுத்து நம்பவைத்து, ஏமாற்றி மோசடி செய்துள்ளார் என்றும், மேற்படி எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் படி குற்றமாகிறது என்றும் எனவே எதிரியை வரவழைத்து விசாரித்து எதிரியை

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:47:33 +0530

தண்டிக்கும் போது கு.வி.மு.ச.357 வது பிரிவின் கீழ் புகார்தாரருக்கு எதிரியிடமிருந்து வரவேண்டிய காசோலைக்குரிய தொகையை நிறையீடாக புகார்தாரருக்கு வழங்கவேண்டும் என்று வாதிட்டார்.

11. இந்த வழக்கில் வழக்கு காசோலை எதிரியுடையது அல்ல என்பதும், வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடையது அல்ல என்பதும் மறுக்கப்படவில்லை. மாறாக புகார்தாரரிடம் எதிரி வாங்கிய கடன் ரூ.20,00,000/–த்திற்கு எதிரியால் ரூ.17,00,000/– + ரூ.1,00,000/–ஆக மொத்தம் ரூ.18,00,000/– செலுத்தியபிறகும் வழக்கு காசோலையில் கண்ட தொகை ரூ.20,00,000/–த்தில் ரூ.18,00,000/– (Part Satisfaction) குறைக்கப்படாமல் உள்ள நிலையில் மேற்படி வழக்கு காசோலையில் கண்ட தொகையை புகார்தாரர் சட்டப்படி வலியுறுத்தி பெறும் கடன் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதிடப்பட்டது.

இந்த வழக்கில் எதிரியால்

23.01.2019	ரூ.5,00,000–/–
25.01.2019	ரூ.5,00,000–/–
09.07.2019	ரூ.2,00,000–/–
11.10.2019	ரூ.2,00,000–/–
17.03.2020	ரூ.1,00,000–/–
09.06.2020	ரூ.1,00,000–/–
14.10.2020	ரூ.1,00,000–/–

மற்றும் புகார்தாரரால் 23.01.2021 ஆம் தேதியிட்டு கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்புக்குப் பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.1,00,000/–ஆக மொத்தம் ரூ.18,00,000/– இந்த வழக்கு காசோலைக்காக திரும்ப வழங்கப்பட்டதா? இல்லையா? என்பதையே தீர்வு செய்யவேண்டியது அவசியமாகிறது.

12.EX.P.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 23.01.2021 ம் தேதியிட்டு புகார்தாரரால் கொடுக்கப்பட்டு வழக்கறிஞர் அறிவிப்பில் "புகார்தாரரும்,எதிரியும் பழக்கப்பட்ட நண்பர்கள் என்றும், இந்த வழக்கில் புகார்தாரரிடம் எதிரி கடந்த 12.07.2018 அன்று அவர்கள் தொழில் அபிவிருத்திக்காக அத்தியாவசிய தேவை என்று தெரிவித்து ஒரிரு மாதத்திற்குள் திரும்பத் தருவதாக உறுதி அளித்து கைமாற்று கடனாக ரூ.20,00,000–/– (இருபது லட்சம்) பெற்றுக்கொண்டார் என்றும், மேற்படி கடனை புகார்தாரர் திரும்ப கேட்டு வந்த நிலையில் எதிரியின் நிறுவனமான பகவதி ஏஜென்சீஸ், மன்னார்குடி நிறுவனத்தின் வங்கி கணக்குள்ள மன்னார்குடி லட்சுமி விலாஸ் வங்கியில் மாற்றத்தக்க காசோலையை புகார்தாரரின் பெயருக்கு 11.01.2021 தேதியில் போட்டு ரூபாய் இருபது இலட்சம் தொகை குறிப்பிட்டு வழங்கிள்ளார் என்றும், அதன் காசோலையில் 000510 மேற்படி காசோலையும் பணத்தையும் பொருட்டு

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.26 16:47:42 +0530

மன்னார்குடி சிட்டி யூனியன் வங்கி கணக்கில் கடந்த 21.01.2021 அன்று வசூலுக்கு தாக்கல் செய்ய, எதிரி வழங்கிய காசோலை எதிரி நிறுவனத்தின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்றும் கடந்த 22.01.2021ம் தேதி திருப்பப்பட்டு உள்ளது" என்றும் கூறப்பட்டுள்ளது.

13. புகார்தாரர் தன்னுடைய குறுக்கு விசாரணையில் " 7 வது மாதம் 2018–ல் இந்த பணத்தை தான் எதிரிக்கு கொடுத்தேன். 2018 மார்ச் முதல் 2019 மார்ச் வரை உள்ள காலம் வருமான வரி செலுத்து காலம் என்றால் சரிதான். தன்னுடைய வருமான வரி கணக்கில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக 2018–2019 க்கான வருமான வரி கணக்கில் தான் சொல்லவில்லை" என்றும், மேலும்

"7 வது மாதம் 2018 ல் மேற்படி இரண்டு வங்கி கணக்குகளிலும் அதிகபட்சமாக 10–ல் இருந்து 15 இலட்சம் இருப்பு இருந்தது. South Indian Bank Mannargudi தனக்கு தெரியும்,அங்கு எதிரிக்கு கணக்கு இருக்கும் விபரம் தனக்கு தெரியும். 2019–2020ல் காலகட்டத்தில் தான் சொல்கிற நேரத்தில் சொல்கிற காலக்கட்டத்தில் 23.01.2019 அன்று காசோலை எண்835810 ரூ.5 லட்சம் எதிரி கொடுத்து தான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் சரிதான். 25.012019 ஆம் தேதி காசோலை எண்835811 ரூ.5 லட்சம் எதிரி கொடுத்து தான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் சரிதான். 09.07.2019 ஆம் தேதி காசோலை எண்.1001605 ரூ.2 லட்சம் எதிரி கொடுத்து தான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் சரிதான். 11.10.2019 ஆம் தேதி காசோலை எண்.1001619 ரூ.2 லட்சம் எதிரி கொடுத்து தான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் சரிதான். 17.03.2020 ஆம் தேதி காசோலை எண்.1003097 ரூ.1 லட்சம் எதிரி கொடுத்து தான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் சரிதான். 09.06.2020 ஆம் தேதி காசோலை எண்.53508 ரூ.1 லட்சம் எதிரி கொடுத்து தான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் சரிதான். 14.10.2020ஆம் தேதி காசோலை எண்.1004128 ரூ.1 லட்சம் எதிரி கொடுத்து தான் வங்கியில் நேரிட்டு தாக்கல் செய்து பணமாக்கி உள்ளேன் என்றால் சரிதான். இதே 20 லட்சம் தொகைக்கு தன்னால் இவ்வழக்கிற்கு முன்பு 23.01.2021 ஆம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பி எதிரியானவர் 25.01.2021 பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரிதான்". என்றும், மேலும்

"எதிரிக்கு ரூ.20 லட்சம் பணம் கொடுத்ததாக இந்த வழக்கு என்றால் சரிதான்.**ஆனால் 20 லட்சம் பணத்திற்கு எவ்வித வட்டியும் கிடையாது.** எதிரி ஒன்றும் தன்னுடைய உறவினர் இல்லை. மேற்படி 20 லட்சம் பணத்தையும் தான் எதிரிக்கு ஒரே நாளில் வைத்து கொடுத்தேன். எனது தரப்பு சான்றவாணமான 3ல் நான் எந்த இடத்திலும் எதிரிக்கு அந்த ஆண்டு, அந்த மாதம்,அந்த தேதியில்,எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று அந்த விவரங்களையும் கூறவில்லை என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள முறையீடு எதிரியிடமிருந்து தனக்கு பதில் வந்த

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.26 16:47:51 +0530

பிறகு தான் தாக்கல் செய்த முறையீடு என்றால் சரிதான் என்றும்,நான் தாக்கல் செய்த தனிநபர் முறையீட்டிலும்,நிரூபண வாக்குமூலத்திலும் எதிரிக்கு அந்த ஆண்டு,அந்த மாதம், அந்த தேதியில், எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்று அந்த விவரங்களையும் கூறவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட சட்டமுறை முன் அறிவிப்பிலும், முறையீட்டில், நிரூபண வாக்குமூலத்திலும் எதிரியிடம் முதன் முதலில் 20 லட்சம் பணம் கொடுக்கும்போது எந்த விதமான ஆதரவு ஆவணங்களும் எழுதி வாங்கிவில்லை என்றால் சரிதான். **எதிரியின் கணக்கான மன்னார்குடி,சௌத் இந்தியன் வங்கிலிருந்து தனக்கு காசோலை மூலம் 17 லட்சம் வந்த விவரத்தை தான் சட்டமுறை முன் அறிவிப்பிலும்,நிரூபண வாக்குமூலத்திலும்,முறையீட்டிலும் கூறவில்லை என்றால் அதற்கும் அந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது. எதிரி கொடுத்த பதில் அறிவிப்பில் 17 லட்சம் மேற்கண்ட வங்கி மூலம் எனக்கு கொடுத்ததை பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளதை படித்து பார்த்தேன். மேற்கண்ட 17 லட்சம் தொடர்பாக தனிநபர் முறையீட்டிலோ,நிரூபண வாக்குமூலத்திலோ தான் எவ்வித விளக்கத்தையும் கூறவில்லை என்றால் சரிதான்".** என்றும், மேலும்

"நான் எதிரிக்கு 20 லட்சம் கொடுத்தேன். கொடுத்தது இன்னன்னாருக்கு தெரியும் என்று நான் பெயர் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் இந்த கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள உறுதி மொழி ஆவணத்தை எதிரிதான் தன்னிடம் கொடுத்து தாக்கல் செய்தார். அந்த உறுதி மொழி ஆவணம் எழுத்தால் எழுதப்பட்டது தான். சுரேஷ் என்பவரும், மார்க்ஸ் என்பவரும் அந்த ஆவணத்தில் கையொப்பமிட்டார்கள். அந்த ஆவணத்தின் தேதி தற்போது ஞாபகம் இல்லை, பார்த்தால் சொல்வேன். அந்த பத்திரம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்ற விவரம் தனக்கு தெரியாது. எதிரிக்கு தான் தெரியும். சுரேஷ் என்பவர் டிரைவராக இருக்கிறார். தற்போது என்ன செய்கிறார் என்று எனக்கு தெரியாது. மார்க்ஸ் என்பவர் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருக்கிறார். நான் தாக்கல் செய்துள்ள உறுதி மொழி ஆவணத்தில் உள்ள விவரங்கள் எதுவும் இந்த எதிரிக்கு தெரியாது என்றும்,அதனால் தான் இந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஒரு கடனுக்கு,ஒரு காசோலையைதான் குற்றமூலத்திற்கு வழக்கறிஞர் அறிவிப்பை வைத்து பயன்படுத்தலாம் என்று சொன்னால் தனக்கு தெரியாது." என்றும், மேலும்

" இதே கடனுக்காக தான் என்னுடைய முறையீட்டில் ஏற்கனவே எதிரிக்கு 11.01.2021 ஆம் தேதியிட்டு அவர் வழங்கிய காசோலை திருப்பப்பட்டது குறித்து சட்டமுறை முன் அறிவிப்பை தன் வழக்கறிஞர் மூலம் 23.01.2021 அன்று அனுப்பியதையும் எதிரி 25.01.2021ல் அதை பெற்றுக்கொண்டதையும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். எதிரி தன்னிடம் எவ்வித உறுதிமொழதி ஆவணத்தையும் டைப்செய்து தரவில்லை என்றும்,இந்த ஆவணம் என்னால் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரி

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.05.26 16:47:58 +0530

உறுதி ஆவணம் எழுதி கொடுத்திருந்தால் பழைய 11.01.2021 தேதியிட்ட காசோலையையே காலதாமதத்தை மன்னிக்க மனு செய்து அதே வழக்குமூலத்தில் வழக்கை தாக்கல் செய்திருக்க முடியும் என்றும்,இது பொய் வழக்கு என்பதால் தீர்ந்து போன கடனுக்கு கொரோனா காலம் என்பதால் அவருடைய ஆவணங்களை திருப்பித்தராமல் நானே வைத்துக்கொண்டு பொய் வழக்கை,பொய் ஆவணங்களை உருவாக்கி சாட்சியம் அளிக்கிறேன் என்றும்,தான் இந்த காசோலையில் சொல்வதுபோல் 20 லட்சம் கைமாற்றுக்கடன் தனக்கும் எதிரிக்கும் காசோலையில் தாக்கல் செய்த தேதியில் கடன் நிலுவையில் இல்லை என்றும்,அவ்வாறு இருந்திருந்தால் ஆதரவு ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. உறவினர் அல்லாத ஒருவருக்கு ஒரு வணிகத்தில் இருக்கும் நான் 20 லட்சம் கைமாற்றுக்கடனாக கொடுத்தது நம்பத்தகுந்ததாக இல்லை என்று சொன்னால் சரியல்ல என்றும், பொய் வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல" என்றும் குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளார்.

14.எதிரிக்கு கடந்த 12.07.2018-ம் தேதி ரூ.20,00,000-/- கடன் கொடுத்ததாகவும், அதற்கு வட்டி இல்லை என்றும் குறிப்பாக புகார்தாரரால் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில்....

23.01.2019	ரூ.5,00,000-/-
25.01.2019	ரூ.5,00,000-/-
09.07.2019	ரூ.2,00,000-/-
11.10.2019	ரூ.2,00,000-/-
17.03.2020	ரூ.1,00,000-/-
09.06.2020	ரூ.1,00,000-/-
14.10.2020	ரூ.1,00,000-/-

ஆக மொத்தம் 17,00,000-/- திரும்ப பெற்றுக்கொண்டுவிட்ட நிலையில் கடந்த 01.03.2021-ந் தேதியிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்தார் என்பதும், அதில் இருவரும் சாட்சிகள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்களை வைத்து பேசி ரூ.21,00,000-/- பேசி அதில் ரூ.1,00,000-/- எதிரி புகார்தாருக்கு கொடுத்து மீதம் ரூ.20,000,000-/-யை மூன்று மாதங்களில் செலுத்த ஒப்புக்கொண்டு, புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்ட Ex.P5-ஐ புகார்தாரரும் எதிரியும் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்பது நம்பும்படியாக இல்லை. மேலும் மேற்படி ஆவணத்தை (Ex.P5) யார் தயார் செய்தது என்பது குறித்தும் எவ்வித குறிப்பும் இல்லை. மேற்படி ஆவணத்தில் கண்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததும் புகார்தாரர் வழக்கை சந்தேகத்திற்குள்ளாக்குகிறது. மேற்படி ரூ.20,00,000/-த்தை மூன்று மாதத்திற்குள் செலுத்த தவறியதால் மீண்டும் எதிரி இந்த

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:48:07 +0530

வழக்கு காசோலையை கொடுத்துள்ளார் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது.

15.எதிரியால் 04.10.2021—ந் தேதி கொடுக்கப்பட்ட பதில் அறிவிப்பில் ரூ.20,00,000—/— தொகைக்கு ரூ.18,00,000—/— தொகை திரும்ப கொடுக்கப்பட்டதாக சொல்லபட்டுள்ள நிலையில், அதனை குறுக்கு விசாரணையில் புகார்தாரர் ஒப்புக்கொண்டுள்ள நிலையிலும், மேற்படி ரூ.18,00,000—/— யை எதிரி புகார்தாரருக்கு எதற்காக கொடுத்தார் என்பதற்கு புகாரில் விளக்கும் கொடுக்காமல் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், புகார்தாரருக்கும், எதிரிக்கும் புகார் தாக்கல் செய்த காலத்தில் ரூ.20,00,000—/— கொடுக்கபட வேண்டிய சட்டப்படியான கடன் இல்லை என்றும், ரூ.17,00,000—/— + ரூ.1,00,000—/— ஆக மொத்தம் ரூ.18,00,000—/— தொகை ரூ.20,00,000—/—ல் கழிக்கப்படவில்லை என்றும், ஆகையால் இந்த புகார் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

16. மேற்படி தனது தரப்பிற்கு ஆதரவாக எதிரி தரப்பில் பின்வரும் முன் தீர்ப்பை சுட்டிக்காட்டி எதிரியால் புகார்தாரருக்கு திரும்ப கொடுக்கப்பட்ட கடன் தொகையை ரூ.18,00,000/—த்தை ரூ.20,00,000/—த்தில் கழிக்கப்படாமல் உள்ளது பிரிவு 56 NI Act—ன் கீழ் பாதிக்கப்படுகிறது என்றும் எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

Dashrathbhai Trikambhai Patel Vs. Hitesh Mahendrabhai Patel & Anr.என்ற வழக்கில் மாண்புமிகு உச்சநீதிமன்றம்

Negotiable Instruments Act, 1881; Section 138, 56 — When a part— payment of the debt is made after the cheque was drawn but before the cheque is encashed, such payment must be endorsed on the cheque under Section 56 of the Act. The cheque cannot be presented for encashment without recording the part payment. If the unendorsed cheque is dishonoured on presentation, the offence under Section 138 would not be attracted since the cheque does not represent a legally enforceable debt at the time of encashment. (Para 29)

Negotiable Instruments Act, 1881; Section 138 — For the commission of an offence under Section 138, the cheque that is dishonoured must represent a legally enforceable debt on the date of maturity or presentation — If the drawer of the cheque pays a part or whole of the sum between the period when the cheque is drawn and when it is encashed upon maturity, then the legally enforceable debt on the date of maturity would not be the sum represented on the cheque —When a part or whole of the sum represented on the cheque is paid by the drawer of the cheque, it must be endorsed on the cheque as prescribed in Section 56 of the Act. The cheque endorsed with the payment made may be used to negotiate the balance, if any. If the cheque that is

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:48:14 +0530

endorsed is dishonoured when it is sought to be encashed upon maturity, then the offence under Section 138 will stand attracted. (Para 30)

Negotiable Instruments Act, 1881; Section 138 – Though a post- dated cheque might be drawn to represent a legally enforceable debt at the time of its drawing, for the offence to be attracted, the cheque must represent a legally enforceable debt at the time of encashment. If there has been a material change in the circumstance such that the sum in the cheque does not represent a legally enforceable debt at the time of maturity or encashment, then the offence under Section 138 is not made out. (Para 16)

17.இந்த வழக்கின் சங்கதிகள் மேற்படி வழக்கின் சங்கதிகளுடன் ஒத்துப்போகிறது . மேலும் எதிரி புகார்தாரருக்கு திரும்ப கொடுத்த ரூ.18,00,000/- தொகையை புகார்தாரரிடம் எதிரி 12.07.2018-ல் வாங்கிய ரூ.20,00,000/-த்தில் கழிக்கப்படாததால் புகார் தாக்கல் செய்த காலத்தில் எதிரிக்கும், புகார்தாரருக்கும் ரூ.20,00,000/-சட்டப்படி கொடுக்கப்படவேண்டிய கடன் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

18.எதிரி எடுத்துள்ள எதிர்வாதத்தை இங்கு மெய்ப்பிக்கும் சுமை எதிரிக்கு இருந்த நிலையில் எதிரி அதை நிரூபணம் செய்துள்ளார். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும், சாட்சியத்தையும் பரிசீலனை செய்த வகையில் எதிரி தான் புகார்தாரரிடம் 12.07.2018 ஆம் தேதி பெற்ற கடன் தொகை ரூ.20,00,000/-த்தில் ரூ.18,00,000/-த்தை புகார்தாரர் வசம் திரும்ப கொடுத்து விட்டார் என்பதை தகுந்த ஆவணங்கள் மூலம் தெளிவாக நிரூபித்துள்ளார் என்றும் மேற்படி தொகை ரூ.20,00,000/-த்தில் கழிக்கப்படாமல் இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

19.மேலும் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்தாராய்ந்ததில் ம.சா.1 வழக்கு காசோலை புகார்தாக்கல் செய்த தேதியில் ரூ.20,00,000/- புகார்தாரருக்கும் எதிரிக்கும் கொடுக்கப்படவேண்டிய சட்டப்படியான கடன் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

20.இறுதியாக, மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் எதிரி குற்றம் புரிந்தவர் அல்ல என இந்நீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட்டு, பிரிவு 278(1) BNSS ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துதட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:48:21 +0530

2026 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றம் அவையறிய என்னால் பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:48:29 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மன்னார்குடி.

1. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சாட்சி :

சாட்சியின் வரிசை எண்.	**சாட்சியின் பெயர்**	**குறிப்பு**
ம.சா.1	ஜெயராஜ்	(புகார்தாரர்)

2. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:

சான்றாவணங்களின் வரிசை எண்.	**சான்றாவணம் குறிப்பு**	**சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம்**
ம.சா.ஆ. 1	எதிரியால் புகார்தாரருக்கு, 28.08.2021 ஆம் தேதியிட்ட மன்னார்குடி லெட்சுமி விலாஸ் வங்கிக்காசோலை அசல்	ம.சா.1– மூலம்
ம.சா.ஆ. 2	02.09.2021 அன்று மன்னார்குடி சிட்டி யூனியன் வங்கிக்காசோலை திருப்பப்பட்டதற்கான காரணம் காட்டும் நமூனா	ம.சா.1– மூலம்
ம.சா.ஆ. 3	03.09.2021 ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்	ம.சா.1 –மூலம்
ம.சா.ஆ. 4	அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை	ம.சா.1– மூலம்
ம.சா.ஆ. 5	புகார்தாரரும் எதிரியும் கடந்த 01.03.2021 ல் ஏற்படுத்திக்கொண்ட உறுதிமொழி ஆவணம் (2 பக்கங்கள்) அசல்	ம.சா.1 –மூலம்
ம.சா.ஆ. 6	04.10.2021 ஆம் தேதியிட்ட எதிரி வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்ட பதில் அறிவிப்பு	ம.சா.1 –மூலம்

ம.சா.ஆ. 7	எதிரி கொடுத்த காசோலை திருப்பப்பட்டதற்காக புகார்தாரர் வழக்கறிஞர் மூலம் 23.01.2021 ஆம் தேதியன்று அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்	ம.சா.1– மூலம்
ம.சா.ஆ. 8	21.01.2021 ஆம் தேதியிட்ட புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பை எதிரி தரப்பில் பெற்றதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல்	ம.சா.1– மூலம்

3. புகார்தாரர்/ மனுதாரர் தரப்பு சான்று பொருட்கள்: இல்லை.

3. எதிரி தரப்பு சாட்சி :

சாட்சியின் வரிசை எண்.	**சாட்சியின் பெயர்**	**குறிப்பு**
எ.ம.சா.1	நிதின்நாராயணன்	மேலாளர் South Indian Bank, Mannargudi

4. எதிரி தரப்பு சான்றாவணம்:

சான்றாவணங்களின் வரிசை எண்.	**சான்றாவணத்தின் விளக்கம்**	**சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம்**
எ.ம.சா.ஆ.1	பகவதி ஏஜென்சீஸ் இந்தியா பிரைவெட் லிட் என்ற பெயரில் கண்டுள்ள கணக்கு விவரங்கள் (கணக்கு எண். 0795073000000076) 2018 லிருந்து 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு விவரங்கள்	எ.ம.சா.1–மூலம்

5. எதிரி தரப்பு சான்று பொருட்கள்: இல்லை

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:48:44 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மன்னார்குடி.

<u>குறிப்பு</u>

1. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2.எதிரி விசாரணை காலத்தில் ஜாமினில் இருந்தார்.

3.தீர்ப்பின் நகல் குற்றவாளிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

<u>நகல் :</u>

மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்தனுப்படுகிறது.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.26 16:48:51 +0530